**வேளாண் இயந்திரமயமாக்குதல் திட்டத்தால் விவசாயிகளின் நிகர வருவாய் அதிகரிப்பு: முதல்வர் கருணாநிதி**

First Published : 05 Mar 2011 03:27:10 AM IST



சென்னை, மார்ச் 3: வேளாண் இயந்திரமயமாக்குதல் திட்டத்தால் விவசாயிகளின் நிகர வருவாய் உயர்வதுடன், வேளாண் பணிகளில் உள்ள இடர்களும் குறைகின்றன என முதல்வர் கருணாநிதி கூறியுள்ளார்.

திமுக அரசின் 5 ஆண்டு கால ஆட்சியில் வேளாண் துறையில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்து, முதல்வர் கருணாநிதி வெள்ளிக்கிழமை வெளியிட்ட கடிதம்:

வேளாண் இயந்திரமயமாக்குதல் திட்டத்தின் மூலம் வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் கருவிகளை விவசாயிகளிடத்தில் அரசு பிரலபடுத்தி வருகிறது. இதனால் வேளாண் உற்பத்தித் திறன் அதிகரித்து, செலவுகள் குறைவதோடு, விவசாயிகளின் நிகர வருவாய் கூடுகிறது. மேலும் வேளாண் பணிகளில் உள்ள இடர்களும் குறைகின்றன.

கோவை செம்மொழி மாநாட்டில் அறிவிக்கப்பட்டபடி சேலம் மாவட்டம் ஏற்காடு, திண்டுக்கல் மாவட்டம் சிறுமலை, தஞ்சை மாவட்டம் சாக்கோட்டை, நாகை மாவட்டம், ராமநாதபுரம் மாவட்டம உள்ளிட்ட பகுதிகளில் பாரம்பரிய மரபணுப் பூங்காக்கள் அமைக்க முதல் கட்டமாக ரூ, 37.391 கோடி ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதுபோல் பல்வேறு பகுதிகளில் தாவரவியல் பூங்காக்கள் அமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் உள்ள பிரையண்ட் பூங்கா, அண்ணா பூங்கா, செட்டியார் பூங்கா ஆகியவை ரூ. 1.59 கோடியில் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

திருப்பூர் மாவட்டம் பொங்கலூரில் வெங்காயத்துக்கென குளிர்பதன வசதியுடன் கூட்ய வணிக வளாகம் ரூ. 1 கோடி செலவில் அமைக்கப்பட்டு வருகிறது.இதுபோல் கிருஷ்ணகிரியில்

மாங்கனிக்காகவும், தருமபுரி மாவட்டம் பாலக்கோட்டில் தக்காளிக்காகவும், தேனி மாவட்டம் ஒடைப்பட்டியில் திராட்சைக்காகவும் தலா ரூ. 1 கோடி செலவில் குளிர்பதன வசதியுடன் கூடிய வணிக வளாகம் அமைக்கப்பட்டு வருகின்றன.

மதுரையில் ரூ. 85 கோடி செலவில் காய்கறி வணிக வளாகம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக முதல்கட்டமாக ரூ. 30 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது என கடிதத்தில் கூறியுள்ளார்.

**முல்லைப் பெரியாறு அணையில் தானியங்கி இயந்திரம் மூலம் மார்ச் 9-ம் தேதி ஆய்வு**

First Published : 05 Mar 2011 03:11:04 AM IST



பெரியாறு அணையில் தண்ணீருக்குள் ஆய்வு நடத்த உள்ள தானியங்கி நவீன இயந்திரம்.

கம்பம், மார்ச் 4: முல்லைப் பெரியாறு அணையில் மத்திய மண் மற்றும் பொருள்களின் ஆராய்ச்சி நிறுவனம் (சி.எஸ்.எம்.ஆர்.எஸ்) சார்பில், நவீன தானியங்கி இயந்திரத்தின் மூலம் மார்ச் 9-ம் தேதி ஆய்வு நடைபெற உள்ளது.

பெரியாறு அணையின் பலம் குறித்து ஆய்வுசெய்ய முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி ஏ.எஸ்.ஆனந்த் தலைமையில் 5 பேர் குழுவை அமைக்க உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. இக் குழுவினர் கடந்த டிசம்பரில் பெரியாறு அணையை ஆய்வு செய்தனர்.

இதன் பின், புதுதில்லியில் உள்ள மத்திய மண் மற்றும் பொருள்களின் ஆராய்ச்சி நிறுவனம் (சி.எஸ்.எம்.ஆர்.எஸ்) துணை இயக்குநர் ராஜ்நாத்சிங் தலைமையில் இரண்டாம் கட்ட ஆய்வு நடத்தப்பட்டது. இதில், ஒரிசாவைச் சேர்ந்த நீர்மூழ்கி வீரர்கள், அணையின் கீழ்ப்பகுதியை நவீன கேமராக்களில் படம் எடுத்தனர்.

÷இந்நிலையில், மார்ச் 9-ம் தேதி ஆர்.ஓ.வி. என்ற தானியங்கி நவீன இயந்திரத்தினைக் கொண்டு, பெரியாறு அணையில் தண்ணீர் உள்ள பகுதியில் அணையின் பலம் குறித்தும், அணையில் விரிசல் மற்றும் துளைகள் உள்ளதா என்பது குறித்தும் ஆய்வு நடத்தப்பட உள்ளது.

இந்த ஆய்வின்போது, அணையின் மேற்பரப்பில் இருந்தபடி, தண்ணீருக்குள் தானியங்கி இயந்திரத்தை இறக்கி படம் எடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆய்வின்போது, குழுவினரைத் தவிர்த்து மற்றவர்களுக்கு அனுமதி இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆய்வின் முடிவுகளை உச்ச நீதிமன்றத்தில் வழங்க உள்ளனர்.

இந்த ஆய்வில், சி.எஸ்.எம்.ஆர்.எஸ் மற்றும் மத்திய நீர் மின்சார ஆராய்சி நிலையத்தின் (சி.பி.டபிள்யூ.ஆர்.எஸ்.) சார்பில் ஆராய்ச்சியாளர்களும், பொறியாளர்களும் பங்கேற்க உள்ளதாக தமிழக பொதுப்பணித் துறை மற்றும் கேரள நீர்பாசனத் துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த ஆய்வுப் பணி மார்ச் 9-ம் தேதி முதல் 24-ம் தேதி வரை நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**செம்மை கரும்பு சாகுபடி பயிற்சி**

First Published : 04 Mar 2011 01:16:14 PM IST

நீடாமங்கலம், மார்ச் 3: திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலையத்தில் செம்மை கரும்பு சாகுபடி பயிற்சி அண்மையில் நடைபெற்றது.

மூன்று நாள்கள் நடைபெற்ற இந்தப் பயிற்சிக்கு தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிறுவன இயக்குனர் முனைவர் த. ஜெயராஜ் தலைமை வகித்து, பயிற்சியை தொடக்கி வைத்தார்.

திருவாரூர் மாவட்ட நபார்டு வளர்ச்சி வங்கி மேலாளர் வி.ஏ. ராகவன், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் கே. பாண்டியன், நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் தி. செங்குட்டுவன், முனைவர் ச. ஆனந்தகிருஷ்ணவேணி உள்ளிட்டோர் பயிற்சியளித்தனர். இதில் 13 மாவட்டங்களைச் சேர்ந்த 25 விவசாயிகள் பயிற்சி பெற்றனர்.

**பால், மோர், தயிர் விலை திடீர் உயர்வு**

பதிவு செய்த நாள் : மார்ச் 04,2011,00:50 IST

ஈரோடு: பால் விலை உயர்வு எதிரொலியாக மோர், தயிர் விலை திடீரென உயர்ந்துள்ளதால் மக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

"பால் விலையை உயர்த்த வேண்டும்' என, பால் உற்பத்தியாளர்கள் நடத்திய பல்வேறு போராட்டம் காரணமாக, நடப்பு ஆண்டு ஜனவரி மாதம் பசும்பால் லிட்டருக்கு 1.10 ரூபாய், எருமை பால் லிட்டருக்கு 2.20 ரூபாய் வீதம் கொள்முதல் விலை உயர்த்தப்பட்டது.

விலை உயர்வு போதுமானதாக இல்லை எனவும், மீண்டும் பால் விலை உயர்த்த வேண்டும் என ஆங்காங்கே சாலைகளில் பால் கொட்டி போராட்டம் நடத்தப்பட்டது. இதன் காரணமாக பசும்பால் லிட்டருக்கு 1.36 ரூபாய், எருமைபால் லிட்டருக்கு 80 பைசாவும் உயர்த்தப்பட்டது. கொள்முதல் விலை உயர்வு காரணமாக பால் விற்பனை விலை உயர்வு லிட்டருக்கு இரண்டு ரூபாய் வரை சென்ற மாதம் உயர்த்தப்பட்டது. கால் லிட்டர் எட்டு ரூபாய், ஒரு லிட்டர் 30 முதல் 32 ரூபாய் வரை விற்கப்படுகிறது.

கோடை வெயில் துவங்கி உள்ளதால் குளிர்பானங்களுக்கு வரவேற்பு கிடைத்துள்ளது. மோர், தயிர் ஆகியவற்றின் விற்பனை அதிகரித்துள்ளது. பால் விலை உயர்வு, விற்பனை அதிகரிப்பு ஆகிய காரணங்களால் மோர், தயிர் ஆகியவற்றின் விலை நடப்பு மாதம் 1ம் தேதி முதல் தனியார் விற்பனையாளர்கள் உயர்த்தி உள்ளனர். எட்டு ரூபாய்க்கு விற்கப்பட்ட தயிர் ஒன்பது ரூபாய், நான்கு ரூபாய்க்கு விற்கப்பட்ட 100 கிராம் தயிர் ஐந்து ரூபாய்க்கும், நான்கு ரூபாய்க்கு விற்கப்பட்ட கால் லிட்டர் மோர் ஐந்து ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

**இயற்கை பாதுகாப்பு கருத்தரங்கம்**

பதிவு செய்த நாள் : மார்ச் 04,2011,03:01 IST

கோவை : குமரகுரு தொழில்நுட்பக் கல்லூரியின் இயற்கை கழக உறுப்பினர்கள் சார்பில், இயற்கை பாதுகாப்பு குறித்த கருத்தரங்கின் துவக்க விழா "வி-கேன்' எனும் தலைப்பில் நடந்தது. துவக்க விழாவில், கல்லூரி மாணவர் ராமகுரு வரவேற்றார். கல்லூரி முதல்வர் ராமச்சந்திரன் துவக்கி வைத்தார். இயற்கை பாதுகாப்பு பற்றிய திரைப்பட தயாரிப்பாளர் சேகர் டடாத்ரி தலைமை வகித்தார். கருத்தரங்கில், அவர் இயக்கிய திரைப்படங்கள் மாணவர்களுக்கு திரையிடப்பட்டன. "சேவ் அவர் ÷ஷாலஸ்' எனும் திரைப்படம், கிழக்கு மற்றும் மேற்கு கடற்கரை

அருகேயுள்ள மலைகள் மற்றும் இயற்கை வளங்கள் பாதுகாப்பு குறித்து விளக்குகிறது. காடுகள், ஆறுகள் மற்றும் இயற்கை பாதுகாப்பு குறித்த கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. குடிநீரின் முக்கியத்துவம் குறித்து மாணவர்களுக்கு விளக்கப்பட்டன.

**ரூ.8.50 லட்சத்துக்குகொப்பரை வர்த்தகம்**

பதிவு செய்த நாள் : மார்ச் 04,2011,02:44 IST

வெள்ளகோவில் : வெள்ளகோவில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் நடந்த ஏலத்துக்கு கடந்த வாரத்தை விட, 50 மூட்டை குறைவாக கொப்பரை வரத்து இருந்தது.அரவக்குறிச்சி, தொட்டியபட்டி, வேடசந்தூர், சொரியங்கிணத்துப்பாளையத்தை சேர்ந்த 50 விவசாயிகள், 350 மூட்டை கொப்பரையை ஏலத்துக்கு கொண்டு வந்தனர். கொப்பரை முதல் தரம் ரூ.52.35, இரண்டாம் தரம் ரூ.40.00 விலை நிர்ணயம் செய்யப்பட்டது. ரூ.8.50 லட்சத்துக்கு கொப்பரை வர்த்தகம் நடந்தது.

**வனஉயிரின கணக்கெடுப்பு பணிகள் துவக்கம்**

பதிவு செய்த நாள் : மார்ச் 04,2011,02:17 IST

ஊட்டி : நீலகிரி வடக்கு, தெற்கு கூடலூர் சரகங்களில் நாளை மற்றும் 6ம் தேதி, வனவிலங்கு கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. கணக்கெடுப்பு பணிகளில் வனத்துறை மற்றும் தன்னார்வலர்கள் பங்கேற்கின்றனர். நீலகிரி வன உயிரின மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சங்க செயலாளர் ஜெயச்சந்திரன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

ஊட்டி எச்.ஏ.டி.பி., அரங்கில் வன விலங்குகள் கணக்கெடுப்பு பணிகள் குறித்த பயிற்சி இன்று காலை 11.00 மணிக்கு நடத்தப்படுகிறது. வன அலுவலர்கள் ராம சுப்ரமணியம், அனுராக்மிஸ்ரா, தீபக் பில்ஜி ஆகியோர் துவக்கி வைக்கின்றனர்.பயிற்சியை உலகளாவிய நிதியகத்தை சேர்ந்த பூபதி, ரவி ஆகியோர் அளிக்கின்றனர். டாக்டர். கலைவாணன் வனவிலங்கு கணக்கெடுப்பு பணிகள் குறித்த நுட்பமான தகவல்களை விளக்குகிறார். இதற்கான ஏற்பாடுகளை நீலகிரி வன உயிரின மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சங்க செயற்குழு உறுப்பினர்கள் விஜய், மது, வாசு, பீமன் உட்பட உறுப்பினர்கள் செய்துள்ளனர்.இவ்வாறு, ஜெயச்சந்திரன் கூறியுள்ளார்.

**வன விலங்கு கணக்கெடுப்பு கள ஊழியர்களுக்கு பயிற்சி**

பதிவு செய்த நாள் : மார்ச் 04,2011,23:08 IST

கூடலூர் : கூடலூர் வன கோட்டத்தில் வன விலங்கு கணக்கெடுப்பு குறித்து வன ஊழியர்களுக்கு சிறப்பு பயிற்சி வழங்கப்பட்டது.கூடலூர், ஊட்டி வடக்கு மற்றும் தெற்கு வனக் கோட்டங்களில் இன்றும், நாளையும் வன விலங்கு கணக்கெடுப்பு பணிகள் நடக்க உள்ளது. வன விலங்கு கணக்கெடுப்பு குறித்து கூடலூர் வன கோட்ட வன ஊழியர்களும், கூடலூர் ஜீன்பூல் தாவர மையத்தில் நேற்று சிறப்பு பயிற்சி முகாம் நடந்தது. கூடலூர் உதவி வன பாதுகாப்பாளர் பாரி வரவேற்றார். முகாமில் கூடலூர் வன அலுவலர் தீபக் பில்ஜி பேசுகையில், ""வன விலங்கு கணக்கெடுப்பில் ஏற்படும் சந்தேகங்களுக்கு ஊழியர்கள் விளக்கம் பெறலாம். கூடலூர் வன கோட்டத்தை 22 பீட்டாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பீட்டுக்கும் இரண்டு வன ஊழியர்கள் மற்றும் ஒரு வன விலங்கு ஆர்வலர் இடம் பெறுவர்,' என்றார். வன விலங்கு கணக்கெடுப்பு முறைகள் குறித்து, தன்னார்வலர்கள் ரவி, தார்ஸ், மது ஆகியோர் பயிற்சி அளித்தனர்.

**மாறவில்லை மளிகை விலை**

பதிவு செய்த நாள் : மார்ச் 04,2011,22:14 IST

சிவகங்கை : சிவகங்கையில் மளிகை பொருட்களின் விலை, இந்த வாரமும் அதே நிலையில் உள்ளது.

விலை விபரம் (கிலோ): துவரம் பருப்பு-68, அதில் இரண்டாவது ரகம் -61; தட்டப்பயறு- 58, இரண்டாவது ரகம் -48; கடலை பருப்பு-39, இரண்டாவது ரகம் -36; உளுந்தம் பருப்பு-70, இரண்டாவது ரகம் -68; வெள்ளை கொண்டக்கடலை -64, இரண்டாவது ரகம்- 56; சிவப்பு கொண்டக்கடலை-40, இரண்டாவது ரகம்- 33; பாசிப் பருப்பு-70, இரண்டாவது ரகம் -68; பாசிப் பயறு-68, இரண்டாவது ரகம் -60; மொச்சை பயறு-50; வெள்ளை மொச்சை-70; பட்டாணி- 24; வெள்ளை பட்டாணி- 28; மல்லி-65, இரண்டாவது ரகம் -56; புளி- 70; நயம்- 80; பொரி கடலை -42; வத்தல்- 60, இரண்டாவது ரகம்- 60; மலைப்பூண்டு- 200; தரப்பூண்டு-130; வெல்லம் -32; கருப்பட்டி (வேம்பார்)- 84; சர்க்கரை -33; சோம்பு-140; வெந்தயம் -520; கசகசா -280; சீரகம்-180; கடுகு-380; மிளகு -280; மஞ்சள் -180 ரூபாய்.

அரிசி (கிலோ): கல்சர் பொன்னி-28; புதியது- 26; டீலக்ஸ் பொன்னி- 24; புதியது- 22; ஐ.ஆர்.20 -

20; செல்லப்பொன்னி -22; புதியது- 20; பொன்னி பச்சரிசி -30; ஐ.ஆர்.20., பச்சரிசி- 22; இட்லி அரிசி- 25; கோதுமை -24; சோளம் -16; கம்பு -18; கேப்பை -17; வரகரிசி -36 ரூபாய்.
எண்ணெய்: கடலை எண்ணெய் -84; பாமாயில் -65; நல்லெண்ணெய் -110; தேங்காய் எண்ணெய் - 120 ரூபாய்.

**தொழில்நுட்ப கருத்தாய்வு போட்டி**


பதிவு செய்த நாள் : மார்ச் 04,2011,22:14 IST

திருப்புத்தூர்: கும்மங்குடி விவேகானந்தா பாலிடெக்னிக் கல்லூரியில் "விவேகாஸ் டெக்னோபெஸ்ட்' என்ற தொழில்நுட்ப கருத்தாய்வு போட்டி நடந்தது. இதில் 76 கல்லூரிகளில் இருந்து 285 ஆய்வு கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. துவக்க விழாவிற்கு கல்லூரி செயலாளர் சொக்கலிங்கம் தலைமை வகித்தார். அண்ணாமலை பாலிடெக்னிக் முதல்வர் சுந்தரராஜன் துவக்கி வைத்தார். முதல்வர் புவனேஸ்வரி வரவேற்றார். கல்வியியல் கல்லூரி முதல்வர் சக்திவேல் பேசினார்.

ஆய்வு கட்டுரைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, கருத்தாய்வு நடந்தது. இதில் 12 பரிசுகள் வழங்கப்பட்டன. விரிவுரையாளர்கள் லோகநாதன், ராமலிங்கம், பேராசிரியர்கள் பாப்பாயி, உமாமகேஸ்வரி நடுவர்களாக பணியாற்றினர். நிறைவு விழாவில், எழுத்தாளர் சங்க மாவட்ட தலைவர் அய்க்கண், ரோட்டரி தலைவர் சாமி, அறங்காவலர் குழு உறுப்பினர் பழனிவேலு பங்கேற்றனர். ஒருங்கிணைப்பாளர்கள் சுந்தரராஜன், தூயவன், தங்கபாரதி ஏற்பாடுகளை செய்தனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

***விளைநிலங்களில் அதிக பயன்பாடு உரம், பூச்சி மருந்து விற்பனை ரூ.7,700 கோடியாக உயரும்***



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

பெங்களூர்

2012–ஆம் ஆண்டில் வேளாண் துறையில் பயன்படுத்தப்படும் உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள் விற்பனை நம் நாட்டில் 170 கோடி டாலரை (சுமார் ரூ.7,700 கோடி) எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது, இத்துறையைச் சேர்ந்த நிறுவனங்களின் தற்போதைய விற்பனையை விட 7.5 சதவீதம் அதிகமாக இருக்கும்.

உரம் – பூச்சிக்கொல்லி

உணவு தானியங்கள், எண்ணெய் வித்துக்கள், பருப்பு வகைகள் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் உரம், பூச்சிக் கொல்லி, களைக் கொல்லி மற்றும் பூஞ்சைக்கொல்லி மருந்துகள் போன்ற வேளாண் ரசாயனப் பொருள்கள் பயன்பாடு அதிகரித்து வருகிறது. மக்கள்தொகை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அதே சமயம் வேளாண் விளைநிலங்கள் குறைந்து வருகின்றன. எனவே உணவு தானியங்கள் உற்பத்தியில் தன்னிறைவு அடைய வேண்டுமானால் இருக்கும் விளைநிலங்களில் மகசூலைப் பெருக்க வேண்டும். எனவே, ஒரு ஹெக்டேர் வாயிலான உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் பல ஆக்கப்பூர்வ நடவடிக்கைககள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிலையில் தோட்டக் கலைத் துறையிலும், பூ வளர்ப்பு துறையிலும் விறுவிறுப்பு ஏற்பட்டு வருகிறது. இதன் காரணமாக உரம், பூச்சிக் கொல்லி மருந்துகளுக்கான தேவைப்பாடு உயர்ந்து வருகிறது.

பூ வளர்ப்பு துறை

நம் நாட்டில் கடந்த மூன்று ஆண்டுகளில் பூ வளர்ப்பு துறை 50 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது. தேசிய தோட்டக் கலை திட்டம், 2012–ஆம் ஆண்டில், தோட்டக் கலை

*பொருட்களின் உற்பத்தியை இரண்டு மடங்கு அதிகரிக்க இலக்கு நிர்ணயம் செய்துள்ளது. எனவே பூ வளர்ப்பு மற்றும் தோட்டக் கலை ஆகிய இரண்டு துறைகளிலும் பூஞ்சைக் கொல்லி மருந்துகளின் பயன்பாடு மிகவும் அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவில், கடந்த 2008–ஆம் ஆண்டில் வேளாண் ரசாயனப் பொருள்கள் விற்பனை 122 கோடி டாலராக இருந்தது. இது, 2009–ஆம் ஆண்டில் 136 கோடி டாலராக உயர்ந்தது.*

## அடுத்த நான்கு ஆண்டுகளில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி சீனாவை விஞ்சும்

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*அடுத்த 3–4 ஆண்டுகளில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி சீனாவை விஞ்சும் வகையில் இருக்கும் என முதன்மை பொருளாதார ஆலோசகர் கவுசிக் பாசு தெரிவித்துள்ளார்.*

*சீனா, ஜப்பான்*

*சர்வதேச அளவில் பொருளாதார வளர்ச்சி வேகத்தில் தற்போது சீனா முதலிடத்தில் உள்ளது. இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. ஆசியா கண்டத்தை பொறுத்தவரை, பொருளாதார வலிமையில் சீனா, ஜப்பான் மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் முதல் மூன்று இடங்களில் உள்ளன. கடந்த 2008–ஆம் ஆண்டில் ஏற்பட்ட கடும் தேக்கநிலைக்குப் பிறகு, தற்போதைய உலக பொருளாதாரத்தின் மறுமலர்ச்சியில் சீனா, இந்தியாவின் பங்களிப்பே அதிகரித்து வருவதாக தெரிகிறது.*

*எதிர்வரும் 2011–12–ஆம் நிதி ஆண்டுக்கான மத்திய பட்ஜெட் அண்மையில் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. பட்ஜெட்டுக்குப் பிறகு புதுடெல்லியில் நடைபெற்ற இந்திய தொழிலக கூட்டமைப்பின் கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்ட பாசு, "இப்போது இந்தியாவும், சீனாவும் வளர்ச்சி வேகத்தில் சமமாக உள்ளதாக கருதுகிறேன். அடுத்த மூன்று, நான்கு ஆண்டுகளில் சீனாவின் பொருளாதார வளர்ச்சி வேகத்தை நம் நாடு விஞ்சும் என எதிர்பார்க்கிறேன்'' என்று தெரிவித்தார்.*

*தனிநபர் வருமானம்*

*நடப்பு நிதி ஆண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 8.6 சதவீதமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, அடுத்த நிதி ஆண்டில் 9.25 சதவீதமாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த 2010–ஆம் ஆண்டின் இறுதி மூன்று மாதங்களில்*

நாட்டின் பொருளாதாரம் 8.2 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது. இதே காலத்தில் சீனாவின் பொருளாதார வளர்ச்சி 9.8 சதவீதமாக இருந்தது.

சர்வதேச அளவில் சீனாதான் நமக்கு எல்லா விதங்களிலும் போட்டியாக உள்ளது. சீனாவின் வளர்ச்சி வேகத்தை விஞ்சும் காலம் நெருங்கி வருகிறது என்றாலும், தனிநபர் ஆண்டு வருமானம் அடிப்படையில் அந்நாட்டை நாம் முந்திச் செல்ல இன்னும் சிறிது காலம் ஆகும் என பாசு தெரிவித்தார். தற்போது அங்கு தனிநபர் வருமானம் நம் நாட்டைக் காட்டிலும் மூன்று மடங்கு அதிகமாக உள்ளது. கடந்த 1978–ல் இரண்டு நாடுகளிலுமே தனிநபர் வருமானம் சமமாக இருந்தது.

உலக வங்கி மதிப்பீடு

உலக வங்கி, அதன் அண்மைக் கால ஆய்வறிக்கை ஒன்றில், 2012–ஆம் ஆண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 8.7 சதவீதமாகவும், சீனாவின் வளர்ச்சி 8.4 சதவீதமாகவும் இருக்கும் என மதிப்பீடு செய்துள்ளது. எனினும் இந்த மதிப்பீடு, இரண்டு நாடுகளின் கரன்சியின் வாங்கும் சக்தியில் உள்ள வேறுபாடுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது ஆகும்.

தற்போது நம் நாட்டின் பொருளாதார வலிமை 1.30 லட்சம் கோடி டாலர் என்ற அளவில் உள்ளது. இது, சீனாவில் 5.50 லட்சம் கோடி டாலராக உள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜி.டீ.பி) அடிப்படையில் இது கணக்கிடப்படுகிறது. இதன்படி, அண்மையில் ஜப்பானை பின்னுக்கு தள்ளி சீனா உலகின் இரண்டாவது பெரிய பொருளாதார சக்தியாக உருவெடுத்துள்ளது.

## 5 ஆண்டுகால தி.மு.க. ஆட்சியில் வேளாண்மை துறையில் நிறைவேற்றப்பட்ட சாதனைகள் என்ன? முதல்–அமைச்சர் கருணாநிதி பட்டியல்

சென்னை, மார்ச்.5–

5 ஆண்டுகால தி.மு.க. ஆட்சியில், வேளாண்மை துறையில் நிறைவேற்றப்பட்ட சாதனைகள் குறித்து முதல்–அமைச்சர் கருணாநிதி பட்டியலிட்டு விளக்கம் அளித்துள்ளார்.

இதுதொடர்பாக, முதல்–அமைச்சர் கருணாநிதி வெளியிட்டுள்ள கடிதம் வடிவிலான அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

வேளாண்மை துறை சாதனைகள்

வேளாண்மைத் துறையில் தி.மு.க. ஆட்சி கடந்த ஐந்தாண்டு காலத்தில் நிறைவேற்றிய சாதனைகள் – திட்டங்களின் தொடர்ச்சியினை எழுதுகிறேன்.

ஐந்தாண்டுகளில் டிராக்டர்கள், பவர் டில்லர்கள், அறுவடை இயந்திரங்கள் முதலிய வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்கிட 36 ஆயிரத்து 813 விவசாயிகளுக்கு 86 கோடியே 71 லட்சம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு குறைந்த வாடகையில் விடுவதற்காக பயன்பாட்டிற்காக, 25 கதிர் அறுவடை இயந்திரங்கள் மற்றும் 50 டிராக்டர்கள் 5 கோடியே 90 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் செலவில் வாங்கப்பட்டுள்ளன. தானிய விளைபொருட்களில் அறுவடைக்குப் பின் ஏற்படும் இழப்பினைக் குறைக்கும் வகையில் கிராமங்களில் 2006–07 முதல் 2009–10 வரை 4 கோடியே 80 லட்சம் ரூபாய் செலவில் 200 உலர்களங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

முந்திரி வர்த்தகம்

முந்திரிக்கென கடலூர் மாவட்டம் பண்ருட்டியில் 16 கோடியே 54 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வேளாண் ஏற்றுமதி மண்டலம் திருவாளர் சத்துவா அக்ரோ எக்ஸ்போர்ட்ஸ் நிறுவனத்தால் 2006–07–ல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்நிறுவனம் மூலம் ஒரு கோடியே 53 லட்சம் ரூபாய் மதிப்புள்ள முந்திரி வர்த்தகம் செய்யப்பட்டுள்ளது.

மலர் சாகுபடி செய்யும் விவசாயிகளின் நலனுக்கென திருநெல்வேலி மாவட்டம், காவல் கிணற்றில் 1 கோடியே 63 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் செலவில் மலர் ஏல மையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. 2009–2010–ம் ஆண்டில் சராசரியாக நாளொன்றுக்கு 85 ஆயிரத்து 756 ரூபாய் மதிப்புள்ள 1500 கிலோ மலர்கள் 124 விவசாயிகளால் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

விற்பனை வளாகம்

4 கோடி ரூபாய் செலவில் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் தென்னை விவசாயிகள் பயன்பெறும் வகையில் தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டைக்கு அருகில் பொன்னவராயன்கோட்டை, உக்கடை கிராமத்தில் தென்னை வணிக வளாகம் அமைக்கப்பட்டு வருகிறது.

சென்னைக்கு அருகில் நாவலூரிலும், மதுரைக்கு அருகில் முக்கம்பட்டியிலும், கோவைக்கு அருகில் பெருந்துறையிலும் காய்கறிகள், பழங்கள் மற்றும் இதர விளைபொருளுக்கு நவீன உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் உற்பத்தி பகுதியில் சேகரிப்பு மைய வசதிகளுடன் கூடிய விற்பனை முனையங்கள் அமைக்கப்பட்டு வருகிறது.

திருச்சி, நாமக்கல் மாவட்டம் மோகனூர், தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம், தேனி மாவட்டம் சின்னமனூர் ஆகிய இடங்களில் தலா 50 லட்சம் ரூபாய் செலவில் வாழை பழுக்க வைக்கும் நான்கு கூடங்கள்; கோவை மாவட்டம் காரமடையில் ஒரு கோடி

ரூபாய் செலவில் மலைக் காய்கறிகளுக்கென விற்பனை வளாகம்; மதுரையில் 36 லட்சம் ரூபாய் செலவில் நெல் வணிக வளாகத்தில் கூடுதல் கடைகள் – ஆகியவற்றுடன் 7 கோடியே 81 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

காய்கறி வணிக வளாகம்

மதுரையில் காய்கறி மற்றும் பழங்கள் விற்பனை செய்யும் விவசாயிகள், வியாபாரிகள் பயன்பெறும் வகையில் "காய்கறி வணிக வளாகம்'' 85 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். முதல்கட்டமாக 30 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளது.

அரசு, தனியார் துறை, கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சேவை நிறுவனங்களுடனும், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள், பாரத வங்கி, அதன் துணை வங்கிகள் ஆகியவற்றுடனும் இணைந்து செயல்பட்டு, தமிழகத்தில் வேளாண் வணிகம் மேம்பட உதவும் தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்புத் திட்டத்தின்கீழ் 132 கோடியே 62 லட்சத்து 73 ஆயிரம் ரூபாய் முதலீட்டுத் தொகையில் 31 வேளாண் வணிக நிறுவனங்களுக்கு தொழில் தொடங்குவதற்கான மூலதன முதலீட்டுத் தொகையாக 12 கோடியே 14 லட்சத்து 84 ஆயிரம் ரூபாய் தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பு மூலம் வழங்கப்பட்டுள்ளது.

4 சதவீத வளர்ச்சி

விவசாய விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்கும் பொருட்டும், விவசாயத்தைப் பிற தொழில்களுக்கு இணையாக உயர்த்தும் பொருட்டும், வேளாண்மைக்குப் பல சலுகைகள் உள்ளடக்கிய 'தொழிற் கொள்கை 2007'–ல் வகுக்கப்பட்டது. இதில் விவசாயத் தொழில்களுக்குப் பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. 11–வது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் வேளாண்மையில் 4 சதவீத வளர்ச்சியினை அடைய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

உலக வங்கி உதவியுடன் வேளாண்மை மற்றும் தோட்டக்கலைப் பயிர்களில் பாசன பரப்பினை அதிகரிக்கும் நோக்குடன் தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம் 63 துணை ஆற்றுப் படுகைகளில் 578 கோடியே 40 லட்சம் ரூபாய் ஒதுக்கீட்டில் 2007–2013 ஆகிய 6 ஆண்டுகளில் செயல்படுத்த திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது. 2007–2008–ம் ஆண்டு முதல் 2010–2011 அக்டோபர் வரை, 76 ஆயிரத்து 444 எக்டர் பரப்பில் 112 கோடியே 69 லட்சம் ரூபாய் செலவில் 55 துணை நீர் வடிநிலப் பகுதிகளில் இத்திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மகளிர் குழுக்கள்

துணை நீர்வடிநிலப் பகுதி விவசாயிகள் கூடுதல் வருமானம் ஈட்டிட அவர்களிடையே

*936 விளைபொருள் குழுக்கள் அமைக்கப்பட்டு, வியாபாரிகளுடன் 558 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்துகொள்ளப்பட்டன. இதுவரை, 64 கோடியே 3 லட்சம் ரூபாய் மதிப்பிலான 50 ஆயிரத்து 925 மெட்ரிக் டன் வேளாண் விளை பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு 15 ஆயிரத்து 36 விவசாயிகள் 4 கோடியே 58 லட்சம் ரூபாய் கூடுதல் வருமானமாகப் பெற்று பயன் அடைந்துள்ளனர். உலக வங்கியின் ஆய்வுக்குழு விற்பனைத் துறையின் செயல்பாட்டினை ஆய்வு செய்து பாராட்டியுள்ளது.*

*2006–07 முதல் 2008–09 வரை 3432 விவசாயிகள் ஆர்வலர் குழுக்கள் ரூ.3.36 கோடி ஒதுக்கீட்டில் 51 ஆயிரத்து 285 விவசாயிகளை உறுப்பினர்களாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. 2006–2007 மற்றும் 2007–2008–ம் ஆண்டுகளில் 5 கோடியே 15 லட்சம் ரூபாய் செலவில் 8 ஆயிரத்து 91 பண்ணை மகளிர் குழுக்களுக்கு சுயதொழில் தொடங்க பயிற்சி மற்றும் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.*

*25 சதவீத மானியம்*

*2008–2009–ம் ஆண்டு 2 ஆயிரத்து 25 குழுக்களுக்கு, குழுவிற்கு 10 ஆயிரம் ரூபாய் வீதம் தொழில் தொடங்க 2 கோடியே 19 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. மொத்தத்தில் 10 ஆயிரத்து 116 குழுக்களை சார்ந்த ஏறத்தாழ ஒரு லட்சத்து 50 ஆயிரம் பண்ணை மகளிர் பயன்பெற்றனர். மேலும் 223 பண்ணை மகளிர் குழுக்கள் வேளாண் இயந்திரங்களை வாடகைக்கு விடுவதன் மூலம் பயன்பெற அக்குழுக்களுக்கு 25 சத மானியத்தில் பண்ணைக் கருவிகள் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் வழங்கப்பட்டுள்ளது.*

*சர்க்கரைத் தொழிலினை மேம்படுத்துவதற்கு தனியார் துறையில் 9 புதிய சர்க்கரை வளாகங்கள் அமைக்க தமிழக அரசு அனுமதி அளித்து உள்ளது. அதில் 8 சர்க்கரை ஆலைகள், நிர்மாணப் பணிகளை முடித்து, சர்க்கரை உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. 2006–2007 அரவைப் பருவம் முதல் கரும்பு வயலில் இருந்து சர்க்கரை ஆலை வரையிலான தூரத்திற்குப் போக்குவரத்து வாகனக் கட்டணம் முழுவதையும் ஆலைகளே ஏற்க வேண்டுமென அரசு அறிவித்து நடைமுறைப் படுத்தப்படுகிறது.*

*எத்தனால் உற்பத்தி*

*மேலும் சர்க்கரை ஆலைகளில், இணைமின் உற்பத்தி நிலையங்களை அமைப்பதில் தமிழகம் முன்னோடியாகவுள்ளது. தமிழ்நாட்டில் 19 தனியார் சர்க்கரை ஆலைகளில் 404.19 மெகாவாட் திறனுடைய இணைமின் உற்பத்தி நிலையங்களும், 3 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் சிறிய இணை மின் நிலையங்களும் உள்ளன. 1125 கோடியே 63 லட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலம் 183 மெகாவாட் திறன் கொண்ட இணைமின் உற்பத்தி நிலையங்களை 12 கூட்டுறவு மற்றும்*

பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் அமைக்க தீர்மானித்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஓர் ஆண்டிற்கு 960 லட்சம் லிட்டர்கள் எத்தனால் உற்பத்தி செய்யக்கூடிய 9 எத்தனால் உற்பத்தி நிலையங்கள் மாநிலத்தில் நிறுவப்பட்டுள்ளது. எரிசாராய உற்பத்தி பற்றாக்குறையினால் 5 சதவீத எத்தனால் கலந்த பெட்ரோல் வழங்கிட இயலாத நிலை உள்ளது. கழிவுப் பாகு உற்பத்தி அதிகரிக்கும் பட்சத்தில், புதியதாக உரிமம் பெற்றுள்ள எரிசாராய நிலையங்கள், உற்பத்தியைத் தொடங்கும்போது 5 சதவீத எத்தனால் கலந்த பெட்ரோல் மாநிலத்தில் முழு அளவில் கிடைக்கும். நாளொன்றுக்கு 45 கிலோ லிட்டர் திறனுள்ள எரிசாராயம் மற்றும் எத்தனால் ஆலைகள், செய்யாறு மற்றும் எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் தலா 36 கோடி ரூபாய் செலவில் நிறுவும் பணி மேற்கொள்ளப்பட்டு, நடைபெற்று வருகிறது.

எரிசாராயம்

கரும்புச் சாற்றுக் கசண்டு, சர்க்கரை ஆலைகளின் விலை மதிப்புள்ள உப உற்பத்திப் பொருளாகும். கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் அமராவதி மற்றும் சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் உற்பத்தியாகும் கரும்புச் சாற்றுக் கசண்டை வடிப்பாலையில் எரிசாராயம் தயாரிக்கப் பயன்படுத்தி வருகின்றன.

இந்த அரசின் சீரிய முயற்சியால் சேலம் மற்றும் அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் 30 கிலோ லிட்டர் எரிசாராய உற்பத்தித் திட்டம் ஆகஸ்ட் 2008–ல் தொடங்கப்பட்டது. மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை 15.10.2010 அன்று மீண்டும் திறக்கப்பட்டு அடுத்த அரவைப் பருவம் முதல் செயல்படும்.

கூட்டுறவு சர்க்கரை ஆலை

தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் கூட்டமைப்பு 2009–2010 சர்க்கரைப் பருவத்திற்கு சிறந்த தொழில்நுட்பச் செயல்திறனுக்காக தமிழகத்தைச் சேர்ந்த சுப்ரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை, கரும்பு மேம்பாட்டிற்காக சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை, நிதி மேலாண்மைக்காக செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலை ஆகியவற்றிற்கு முதல் பரிசு வழங்கிப் பாராட்டியுள்ளது.

தமிழக வேளாண்மை வளர்ச்சியில் வேளாண் கல்வி, வேளாண் ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கம் ஆகியவற்றைக் குறிக்கோளாகக் கொண்டு 1971–ம் ஆண்டில் நான் முதல்–அமைச்சராக இருந்தபோது தமிழகத்தில் உருவாக்கிய வேளாண்மைப் பல்கலைக்கழகம், 7 வளாகங்களில் அமைந்துள்ள 10 கல்லூரிகள், 36 ஆராய்ச்சி நிலையங்கள், 14 வேளாண்மை அறிவியல் மையங்கள் மூலமாக பெரிதும் தொண்டாற்றி வருகிறது.

பண்ணை கருவிகள்

வேளாண்மைத் தொழிலை வாழ்வாதாரமாக கொண்டுள்ள விவசாயிகள் நிறைந்த நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சை மாவட்டங்களில் உள்ள மாணவர்கள் பெரிதும் பயன்பெற வேண்டுமென்ற எண்ணத்தோடு, நாகை மாவட்டத்தில் உள்ள கீவளூரில் புதிதாக வேளாண்மைக் கல்லூரியும் – வேளாண்மையின் எதிர்காலம் என்று கருதப்படும் தோட்டக்கலைக்கென தனியே "தோட்டக்கலை பல்கலைக்கழகம்" ஒன்றை கிருஷ்ணகிரி மாவட்டத்திலும் இந்த ஆண்டு தொடங்கவுள்ளது.

தமிழக விவசாயிகளின் தேவைக்கேற்ப ஐந்தாண்டுகளில் 56 புதிய பயிர் ரகங்கள், 20 பண்ணைக் கருவிகள், 20 மேலாண்மைத் தொழில் நுட்பங்கள் ஆகியவற்றை உருவாக்கி வெளியிட்டு வேளாண்மை உற்பத்தி பெருகிட உதவியுள்ளது.

வேளாண் அலுவலர்கள்

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தமிழகத்திலே அமைந்தபோதெல்லாம் இவ்வாறு வேளாண் மக்களுக்கு சலுகைகளையும், திட்டங்களையும் வழங்கியது போலவே, வேளாண்மை அலுவலர்களுக்கு அடுக்கடுக்கான பல உதவிகளை செய்து வருகிறது என்பதை 24–11–2010 அன்று சென்னையிலே நடைபெற்ற அவர்களது மாநாட்டிலேயே என்னால் உணர்ந்துகொள்ள முடிந்தது.

1972–ம் ஆண்டு தி.மு.க. ஆட்சியிலேதான் வேளாண்மை அலுவலர்களுக்கு கெஜட்டட் தகுதியே வழங்கப்பட்டது. 1989–ம் ஆண்டு கால்நடை உதவி மருத்துவர், உதவிப் பொறியாளர்களுக்கு இணையாக வேளாண்மை அலுவலர்களுக்கு ஊதியம் அளிக்கப்பட்டது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் தொகுப்பூதியத்தில் பணிபுரிந்த 131 உதவி ஆசிரியர்களுக்கு காலமுறை ஊதியமளித்து உதவிப் பேராசிரியர்களாக பணி நியமனம் செய்யப்பட்டது. 2007–ம் ஆண்டு துறை மறு சீரமைப்பில் 509 வேளாண்மை அலுவலர்கள் பணி இடங்களை உதவி வேளாண்மை இயக்குநர்களாகவும் – 512 உதவி விதை அலுவலர் பணி இடங்களை துணை வேளாண்மை அலுவலர்களாகவும் – 514 உதவி வேளாண்மை அலுவலர் பணி இடங்களை உதவி விதை அலுவலர்களாகவும் – அதே போல 399 உதவி மண்வளப் பாதுகாப்பு அலுவலர் பணி இடங்களை இளநிலைப் பொறியாளர்களாகவும் – பொறியியல் பட்டம் பெற்ற 54 உதவி மண்வளப் பாதுகாப்பு அலுவலர் பணி இடங்களை உதவிப் பொறியாளர்களாகவும் தரம் உயர்த்தி பதவி உயர்வும் அளிக்கப்பட்டது.

அதிகாரிகள் ஒத்துழைப்பு

பணி நியமனத் தடைச் சட்டத்தை நீக்கி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்

*கழகத்தில் 338 உதவிப் பேராசிரியர்கள், வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறைகளில் 540 வேளாண்மை அலுவலர்கள், 47 தோட்டக்கலை அலுவலர்கள், 1707 உதவி வேளாண்மை அலுவலர்கள் ஆக மொத்தம் 2632 பணி இடங்களுக்கு நேரடி நியமனமும், வேளாண் துறையில் 3544 அலுவலர்களுக்கு பதவி உயர்வும் வழங்கப்பட்டுள்ளது.*

*தம்பி வீரபாண்டி ஆறுமுகத்தின் பொறுப்பிலுள்ள இந்தத் துறையின் சார்பாக அதிகாரிகளின் ஒத்துழைப்போடு செய்யப்பட்டுள்ள சாதனைகளைத் தொகுத்து வெளியிட்டுள்ளேன். நீ படிப்பதோடு மட்டும் இருந்து விடாமல் இவ்வளவு சாதனைகள் விவசாயப் பெருங்குடி மக்களுக்காக இந்த ஐந்தாண்டு காலத்தில் செய்யப்பட்டுள்ளன என்பதை அவர்களுக்கு நினைவுபடுத்திடவும் தவறாதே.*

*இவ்வாறு அறிக்கையில் முதல்–அமைச்சர் கருணாநிதி கூறியுள்ளார்.*

## ***நீலகிரி மாவட்டத்தில் வன விலங்குகள் கணக்கெடுப்பு குறித்து தன்னார்வலர்களுக்கு பயிற்சி***

*ஊட்டி, மார்ச்.5–*

*நீலகிரி மாவட்டத்தில் உள்ள வன விலங்குகள் கணக்கெடுக்கும் பணி யில் ஈடுபட உள்ள தன்னார்வலர்களுக்கு ஊட்டியில் நேற்று பயிற்சி அளிக்கப்பட்டது.*

*60 சதவீத வனப்பகுதி*

*நீலகிரி மாவட்டம் தமிழ் நாட்டிலையே அதிக வனப் பகுதிகள் கொண்ட மாவட்ட மாக உள்ளது. மேலும் இந்த மாவட்டத்தில் அதிகளவு வன விலங்குகளும் வசிக்கின்றன. தென் இந்தியாவில் புலிகள் அதிகம் வசிக்கும் பகுதியாக முதுமலை புலிகள் காப்பகம் உள்ளது.*

*ஆண்டுதோறும் வனப்பகுதி யில் உள்ள வன விலங்குகள் எண்ணிக்கை கணக்கெடுக்கப் படுகின்றன. தற்போது கோடை காலம் தொடங்கி உள்ளதால் வன விலங்குகள் உணவு மற்றும் தண்ணீரை தேடி மிக விரைவில் இடம் பெயர ஆரம்பித்து விடும்.*

*தன்னார்வலர்கள்*

*எனவே வன விலங்குகள் கணக்கெடுக்கும் பணியில் வன ஊழியர்கள் மற்றும் தன்னார்வலர்கள், மாணவர் கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர். இந்த ஆண்டு கணக்கெடுப்பு இன்று (சனிக்கிழமை) தொடங்கி 2 நாட்கள் நடை பெற உள்ளது. இந்த வன விலங்குகளின் கணக்கெடுப்பில் கலந்து கொள்ளும் தன்னார்வலர் களுக்கு*

வன விலங்குகளை கணக் கெடுப்பது குறித்த பயிற்சி முகாம் ஊட்டி மலைப்பகுதி மேம்பாட்டு திட்ட பயிற்நி மையத்தில் நேற்று நடைபெற்றது.

ஒரே நேரத்தில் கணக்கெடுப்பு

இந்த பயிற்சி முகாமில் கலந்து கொண்ட ஊட்டி வடக்கு கோட்ட வன அலு வலர் ராமசுப்பிரமணி யம் பேசியதாவது:–

நீலகிரி மவாட்டத்தில் முதல் முறையாக ஊட்டி வடக்கு மற்றும் தெற்கு, கூட லூர் ஆகிய 3 வனக் கோட் டங்களில் ஒரே நேரத்தில் காட்டு யானைகள், சிறுத்தை கள், புலிகள், கரடிகள், மான்கள் உள்ளிட்ட வன விலங்குகளின் கணக்கெடுப்பு நடைபெற உள்ளது.

காலடி தடம்

இந்த பயிற்சி பெற உள்ள தன்னார்வலர்கள் வன விலங்குகளின் காலடி தடத்தை மட்டும் வைத்து கணக்கெடுக்க கூடாது. வன விலங்களையும் கண்காணிக்க வேண்டும். அதன் பிறகு தான் கணக் கெடுக்க வேண்டும்.

கணக்கெடுப்பின்போது மிகவும் கவனத்துடன், துல்லி யமாகவும் கணக்கெடுக்க வேண்டும். இந்த கணக்கெடுப்பு பணியில் ஈடுபடுபவர்கள் வனத்துறை ஊழியர்களுடன் மட்டும் செல்ல வேண்டும். தனித்து செல்ல வேண்டும்.

200 பேர்

முதல் முறையாக இந்த கணக்கெடுப்பு பணியில் சென்னை, பாண்டிச்சேரி உள்பட பல்வேறு பகுதிகளை சேர்ந்த 200 பேர் ஈடுபடுத்த உள்ளனர்.

இவ்வாறுஅவர் பேசினார்.

இதில் ஊட்டி தெற்கு வன கோட்ட அலுவலர் அனுராக் மிஸ்ரா, உதவி வன பாதுகாவலர் ஜெயராஜ், வைல்டு அமைப்பை சேர்ந்த பூமிநாதன், வன உயிரின அமைப்பை சேர்ந்த ஜெயச் சந்திரன் உள்பட ஏராளமா னோர்கள் கலந்து கொண்ட னர்.